புறநகர் மருத்துவமனையிலே வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 49, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பிரபு, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

49—

புதிய மாவட்டம்

***5236—திரு. அ. பிரபு:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கள்ளக்குறிச்சி தொகுதியில் கள்ளக்குறிச்சியை தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் உருவாக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.*

புதிய மாவட்டம் உருவாக்குவது என்பது அரசின் கொள்கை முடிவுக்கு உட்பட்டது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பிரபு அவர்கள்.*

திரு. அ. பிரபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்ணைவிட்டு மறைந்தாலும் மக்கள் மனதிலே நீங்காத இடம் பிடித்து வாழ்ந்து கொண்டிருக்கும் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திருவடிகளை வணங்குகிறேன்.*

விழுப்புரம் மாவட்டம் மிகப் பெரிய மாவட்டமாகும். இம்மாவட்டம் கல்வராயன் மலையில் தொடங்கி மரக்காணம் கடற்கரை வரை சுமார் 220 கிலோ மீட்டர் நீளமும் மற்றும் 7,217 சதுர கிலோ மீட்டர் பரப்பளவும் கொண்டதாகும்.

இந்த மாவட்டத்தில் சுமார் 35 இலட்சம் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். விழுப்புரம் மாவட்டம் என்பது 4 கோட்டங்கள், 13 வருவாய் வட்டங்கள், 3 நகராட்சிகள், 15 பேரூராட்சிகள், 22 ஒன்றியங்கள், 1,099 ஊராட்சிகள் மற்றும் 1,490 வருவாய்க் கிராமங்களைக் கொண்ட மாவட்டமாகும். எனவே, விழுப்புரம் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, கள்ளக்குறிச்சியைத் தலைமையிடமாகக் கொண்டு, ஒரு புதிய மாவட்டத்தை உருவாக்கித் தந்தால், அந்தப் பகுதியில் இருக்கும் சுமார் 11 ஒன்றியங்கள் மற்றும் 5 தொகுதிகள் பயன்பெறும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறையின் சேவையை மேம்படுத்தவும், மக்களுக்கு விரைவான சேவையை அளிக்கவும், வருவாய்த் துறையை மக்கள் எளிதில் அணுகவும், முன்மாதிரியான நடவடிக்கைகளை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு எடுத்து வருகிறது. பொது மக்கள் வருவாய்த் துறையை எளிதில் அணுகிட, மக்கள்தொகை மற்றும் நிலப்பரப்பின் அடிப்படையிலே வட்டங்கள், வருவாய்க் கோட்டங்கள் மற்றும் மாவட்டங்கள் பிரிக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையிலே, அரசாணை (நிலை) எண் 279, வருவாய்த் துறை நாள் 9–6–2003–ன்படி, புதிய மாவட்டம் அமைக்க வேண்டுமென்றால், 2,500 சதுர கிலோ மீட்டர் முதல் 9,000 சதுர கிலோ மீட்டர் வரை பரப்பளவும், மக்கள்தொகையின் எண்ணிக்கையில் 10 இலட்சம் முதல் 30 இலட்சம் வரையும், குறைந்தளவு 200 வருவாய்க் கிராமங்களும், குறைந்தபட்சம் 5 வட்டங்களும், குறைந்தபட்சம் 2 கோட்டங்களும் அளவுகோல்களாக நிர்ணயிக்கப்பட்டுள்ளன. தற்போது, விழுப்புரம் மாவட்டத்தில் 10 வட்டங்களும், 4 கோட்டங்களும், 34 இலட்சத்து 63 ஆயிரத்து 244 மக்கள்தொகையும், 7,245.91 சதுர கிலோ மீட்டர் பரப்பளவும் மற்றும் 1,490 வருவாய்க் கிராமங்களும் உள்ளன.

2017 மார்ச் 20]

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *உத்தேசிக்கப்படும் கள்ளக்குறிச்சியைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் உருவாக்கினால், கள்ளக்குறிச்சி, சங்கராபுரம், சின்னசேலம், திருக்கோவிலூர் மற்றும் உளுந்தூர்பேட்டை ஆகிய ஐந்து வட்டங்களும், கள்ளக்குறிச்சி மற்றும் திருக்கோவிலூர் ஆகிய இரண்டு வருவாய்க் கோட்டங்களும் உள்ளடங்கியிருக்கும். புதியதாகத் தோற்றுவிக்கப்படும் மாவட்டத்தின் பரப்பளவு 3,819.70 சதுர கிலோ மீட்டராகவும், புதிய மாவட்டத்தின் மக்கள் தொகை 16,28,687 ஆகவும், 690 வருவாய்க் கிராமங்களும் இருக்கும். எனவே, கள்ளக்குறிச்சியைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் உருவாக்குவது என்பது சாத்தியமானதாக இருந்தாலும்கூட, புதிய மாவட்டம் உருவாக்குவது என்பது அரசின் கொள்கை முடிவுக்கு உட்பட்டது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பிரபு அவர்கள்.*

திரு. அ. பிரபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சியைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய மாவட்டம் உருவாக்க வேண்டும் என்பது அப்பகுதி மக்களின் பல வருடக் கோரிக்கையாகவும் மற்றும் எதிர்பார்ப்பாகவும் உள்ளது. சின்னசேலம் பகுதியிலிருந்தோ, கல்வராயன்மலையிலிருந்தோ, மாவட்ட அலுவலகத்திற்குச் சென்றுவர வேண்டுமென்றால், ஒரு நாள் ஆகி விடுகின்றது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பக்கத்து மாவட்டத்தைச் சேர்ந்தவர்; எனவே, அவருக்கு நன்றாகத் தெரியும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த வழியிலேதான் சென்றுவருகிறார்கள். எனவே, மக்களின் நலனைக் கருதி, மக்களுக்காக இயங்கிக்கொண்டிருக்கும் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலுடன் செயல்பட்டுக்கொண்டிருக்கும் இந்த அரசு, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, நடப்பு ஆண்டிலேயே கள்ளக்குறிச்சியைத்*

தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய மாவட்டம் உருவாக்கித் தரவேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991 ஆம் ஆண்டு தஞ்சாவூர் மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டு நாகப்பட்டினம் மாவட்டமும், 1993 ஆம் ஆண்டு பழைய தென்னாற்காடு மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டு கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களும், 1995 ஆம் ஆண்டு திருச்சி மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டு கரூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களும், 2004 ஆம் ஆண்டு தருமபுரி மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டு கிருஷ்ணகிரி மாவட்டம் என புதிய மாவட்டங்களை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய புனித அரசு, தேவையின் அடிப்படையில் உருவாக்கித் தந்திருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த அவையில் பதிவு செய்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன் அவர்கள்.

திரு. தா. உதயசூரியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் புள்ளிவிவரங்களை எல்லாம் தந்தார்கள். விழுப்புரம், வேலூர் மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இருக்கும் சேலம் மாவட்டங்கள் பெரிய வருவாய் மாவட்டங்களாகும். சேலம் மாவட்டத்தில் 11 தொகுதிகள்; விழுப்புரம் மாவட்டத்தில் 11 தொகுதிகள்; வேலூர் மாவட்டத்தில் 13 தொகுதிகள் உள்ளடங்கியிருக்கின்றன. 2 தொகுதிகள், 3 தொகுதிகள் இருக்கின்ற அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்கள் எல்லாம் தலைவர் கலைஞர் ஆட்சியில் பிரிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, மக்களுடைய நலனைக் கருதி, மாண்புமிகு அமைச்சர்

அவர்கள் மறுபரிசீலனை செய்து, வட்டங்கள், வருவாய்க் கோட்டங்கள் போன்றவற்றைக் கருத்தில்கொள்ளாமல், இந்த மாவட்டங்களைப் பிரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், கல்வராயன்மலையிலிருந்து மக்கள், விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு வர வேண்டுமென்றால், 162 கிலோ மீட்டர் பயணம் செய்ய வேண்டும். ஒரு நாள் முழுவதும் மக்களின் நேரம் வீணடிக்கப்படுவதோடு, செலவும் ஆகிறது. விழுப்புரம் மாவட்டத்தில் 11 தொகுதிகள், வேலூர் மாவட்டத்தில் 13 தொகுதிகள் இருக்கின்றன. ஆகவே, மக்களுடைய நலனைக் கருத்திற்கொண்டு, விழுப்புரம் மாவட்டத்தைப் பிரித்து, கள்ளக்குறிச்சியைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு மாவட்டமும், மாண்புமிகு முதலமைச்சர் இருக்கும் 11 தொகுதிகளை உள்ளடக்கிய சேலம் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, ஆத்தூரைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு மாவட்டமும் உருவாக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல வட்டங்கள், கோட்டங்கள், மாவட்டங்களைப் பிரிப்பதற்கு பரப்பளவு, மக்கள்தொகை, வருவாய்க் கிராமங்கள் போன்றவற்றின் அடிப்படையிலே விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. 3 அலுவலர்கள் இடம்பெற்றுள்ள ஓர் உயர்மட்டக் குழு, தேவையின் அடிப்படையில் அதனைப் பரிசீலித்து அரசுக்குப் பரிந்துரை செய்யும். புதிய மாவட்டங்கள் உருவாக்குவது என்பது அரசின் கொள்கை முடிவாக அமைந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சில மாவட்டங்களைக் குறிப்பிட்டு, அவற்றைப் பிரிக்க வேண்டியதன் அவசியத்தை இந்த அவையில் எடுத்துவைத்திருக்கிறார்கள். மக்களுடைய தேவையை உணர்ந்து செயல்படும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, தேவையான நடவடிக்கைகளை எடுத்துவருகிறது. அந்தவகையிலேயேதான், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு புதியதாக வருவாய்த் துறை வரலாற்றிலே 65 புதிய வட்டங்களை உருவாக்கித் தந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, வருவாய்த் துறையை மக்கள் எளிதிலே அணுகுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மாண்புமிகு புரட்சித் தலைவி

அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைகளையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 50, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். காளிமுத்து, மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

50—

சமுதாயக் கூடம்

***12801—திரு. வி.எஸ். காளிமுத்து:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாராபுரம் தொகுதி, மூலனூர் ஊராட்சி ஒன்றியம், தலையூர் ஊராட்சி, மல்லம்பாளையம் ஆதி திராவிடர் குடியிருப்பில் சமுதாயக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஆதி திராவிடர் மக்களின் எண்ணிக்கை, தேவையான இடம், போதுமான நிதி ஒதுக்கீடு ஆகியவற்றைக் கணக்கில்கொண்டு சமுதாயக் கூடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. அந்த வகையில், தாராபுரம் தொகுதி, மூலனூர் ஒன்றியம், தலையூர் ஊராட்சி, மல்லம்பாளையம் ஆதி திராவிடர் குடியிருப்பில் சமுதாயக் கூடம் கட்டுவது குறித்த உறுப்பினரின் கோரிக்கை, மக்கள்தொகை, போதுமான இடம் மற்றும் இதர ஆவணங்களின் அடிப்படையில் பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS